www.Padasalai.Net

12 DEC 2024

079700

A1 02/12/2024

**சுருக்கம்**

தமிழ்நாடு பள்ளிக்கல்விப்பணி – திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திருமதி.ப.ஜோதிலட்சுமி என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.17378/2020இன் மீதான தீர்ப்பாணையினை செயல்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் [(பக1(1)] துறை**

**அரசாணை (நிலை) எண். 256** | நாள் 02.12.2024
**திருவள்ளுவராண்டு-2055**
**குரோதி, கார்த்திகை-17**

**படிக்கப்பட்டவை:**

1. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.17378/2020இன் மீதான தீர்ப்பாணை, நாள் 06.03.2024.
2. சென்னை உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.2038/ 2024இல் பெறப்பட்ட இடைக்கால தீர்ப்பாணை, நாள் 17.10.2024 மற்றும் 14.11.2024.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.52531/அ1/இ1/2020, நாள் 22.11.2024 மற்றும் 27.11.2024.

—

**ஆணை:-**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகராட்சி அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து வரும் திருமதி.ப.ஜோதிலட்சுமி என்பவர் 2020-2021 ஆம் ஆண்டுக்கான மாவட்டக்கல்வி அலுவலர் பதவி உயர்வு/ பணிமாறுதலுக்கு தகுதியான அரசு உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் முன்னுரிமை பட்டியலில் தமது பெயரினை சேர்த்து தமக்கும் மாவட்டக்கல்வி அலுவலராகப் பதவி உயர்வு வழங்கக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நீதிப்பேராணை மனு எண்.17378/2020இன் மீது மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

www.Padasalai.Net



2. இந்நேர்வில் திருமதி.ப.ஜோதிலட்சுமி என்பவரால் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மனுதாரரால் தொடரப்பட்ட மூல வழக்கின் (நீதிப்பேராணை மனு எண்.17378/2020) 06.03.2024ஆம் நாளிட்ட தீர்ப்பாணையினை செயல்படுத்தி அவ்விவரத்தினை 03.12.2024 அன்று மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில் மனுதாரரால் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.17378/2020இன் மீதான 6.3.2024ஆம் நாளிட்ட தீர்ப்பினை செயல்படுத்தும் பொருட்டு, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டு வழக்கின் மீதான இறுதித் தீர்ப்புக்குட்பட்டு (Subject to outcome of Writ Appeal to be Filed) மனுதாரர் திருமதி.ப.ஜோதிலட்சுமி என்பவரது பெயரை, அன்னார் நகராட்சி உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்தில் தற்போது பணியில் உள்ள ஒரே தலைமையாசிரியர் என்பதால் இதனை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி இவ்வுத்தரவு தனியருக்கு மட்டுமே பொருந்தும் என்ற நிபந்தனையுடன், அன்னாருக்கு முன்னதாக உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரான திருமதி.ஏ.அமலாதங்கத்தாய் என்பவர் பணிமாறுதல் மூலம் மாவட்டக் கல்வி அலுவலராக நியமனம் பெற்ற 2022-2023ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கல்வி அலுவலர் பெயர்ப்பட்டியலில் திருமதி.ஏ.அமலாதங்கத்தாய் என்பவருக்கு அடுத்ததாக வைத்து திருமதி.ப.ஜோதிலட்சுமி என்பவருக்கு மாவட்டக் கல்வி அலுவலராக தற்காலிகமாக பணிமாறுதல் மூலம் நியமனம் வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப் பின்னர், தமிழ்நாடு பள்ளிக்கல்விப் பணி விதிகளின்கீழ் மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் மட்டுமே ஊட்டுப் பணியிடமாக (Feeder category) உள்ள நிலையில், திருமதி ப.ஜோதிலட்சுமி என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.17378/2020இன் மீதான 06.03.2024ஆம் நாளிட்ட தீர்ப்பினை செயல்படுத்தும் பொருட்டு, இதனை சிறப்பு நிகழ்வாக கருதி,திருமதி ப.ஜோதிலட்சுமி என்பார் தமிழ்நாடு நகராட்சி மற்றும் நகரவை பள்ளிகள் சிறப்பு விதிகளின் கீழ் வரும் நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக பணிபுரியும் ஒரே தலைமை ஆசிரியர் என்பதால் தமிழ்நாடு பள்ளிக்கல்விப் பணி விதிகளுக்கு விலக்களித்து, திருமதி.ப.ஜோதிலட்சுமி என்பாருக்கு இணையான அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரான திருமதி.ஏ.அமலாதங்கத்தாய் என்பவர் பணிமாறுதல் மூலம் மாவட்டக் கல்வி அலுவலராக நியமனம் பெற்ற 2022-2023ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கல்வி அலுவலர் பெயர்ப்பட்டியலில் திருமதி.ஏ.அமலாதங்கத்தாய் என்பவருக்கு

www.Padasalai.Net



அடுத்ததாக வைத்து அன்னார் மாவட்டக் கல்வி அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 01.10.2022 முதல் கருத்தியலாக மாவட்டக்கல்வி அலுவலராக தற்காலிகமாக பணி மாறுதல் மூலம் நியமனம் செய்து கொள்ள பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கலாம் எனவும், திருமதி ப.ஜோதிலட்சுமி என்பாரது பெயரினை உரிய இடத்தில் சேர்த்து முறைப்படுத்துவது குறித்து பின்னர் பரிசீலிக்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது. இந்நியமனம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டு வழக்கின் மீதான இறுதி தீர்ப்பிற்குட்பட்டது என்றும் (Subject to outcome of Writ Appeal to be filed) இவ்வாணை தனியருக்கு மட்டுமே பொருந்தும் என்றும் மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடங்களை நிரப்புதல் தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்/ சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது என்றும் அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சோ.மதுமதி,**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்

திருமதி.ப.ஜோதிலட்சுமி, தலைமை ஆசிரியர்,
திருவண்ணாமலை நகராட்சி அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருவண்ணாமலை மாவட்டம். (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக).
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை – 6.
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக).
சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக).
மாநிலக் கணக்காயர், சென்னை-18

நகல்

பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரிநகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**